# இமாம் ஷாஃபி (ரஹ்) மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி

# செய்திமலர்

செப்டம்பர் 2022 மாணவர்களால் மாதந்தோறும் மலரும் மலர்

## மாதாந்திர ஹதீஸ்

لَا تُمَارِ أَخَاكَ - ترمذي

உன் சகோதரரிடம் நீ சண்டை செய்ய வேண்டாம்.
- திர்மிதீ

- இஸ்லாம் சண்டை, சச்சரவுகளை வெறுக்கின்றது.
- சண்டை, சச்சரவு செய்பவர்களை கண்டு அனைவரும் விரண்டோடுவார்கள்.
- சண்டை, சச்சரவுகளிலிருந்து ஒதுங்கி இருப்பவர்களை மக்கள் நேசிப்பார்கள்.

## வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஆசிரியர்

மாதா,பிதா, குரு, தெய்வம் என்று சொல்வார்கள். வேறு எந்த பணிக்கும் கிடைக்காத பெருமை ஆசிரியர்களுக்கு உண்டு. அத்தகைய சிறப்பு மிக்கவர்களுக்கு நன்றி செலுத்தும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் ஐந்தாம் நாள் நம் நாட்டில் ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது. வெறும் மாணவர்களாக பள்ளிக்கு வரும் சிறுவர்களுக்கு ஒழுக்கம், நல்ல பழக்கவழக்கம், கல்வி என அறிவுக்கண்ணை திறந்த ஆசிரியர்களைக் கொண்டாடும் பெருநாளே ஆசிரியர் தினமாகும்.

'எங்கே நடப்படுகிறாயோ அங்கே மலராகு' என்ற பொன்மொழிக்கு எடுத்துக்காட்டாய் இருப்பவர்கள் ஆசிரியர்கள். தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவர்களை, வாழ்க்கை என்றால் என்ன? இதில் ஆற்ற வேண்டிய கடமை என்னென்ன? என்பதை தெளிவாக கற்றுக் கொடுக்கின்றனர். “குறிக்கோள் இல்லாத வாழ்க்கை; முகவரி இல்லாத கடிதத்திற்கு சமம்”. இதுபோல மாணவ சமூகமும் குறிக்கோள், லட்சியம் இல்லாமல் இருந்தால் 'எதிர்காலம் ஓர் இருண்ட காலமாகும்' என்பதை ஆரம்ப காலத்தில் இருந்தே மனதில் நன்கு பதிய வைத்து வெற்றியை நோக்கி பயணிக்க வைப்பவர்களே ஆசிரியர்கள் அவர்கள் மாணவர் சமூகத்தை உருவாக்குபவர்கள் அல்ல; மாறாக உயிரூட்டுபவர்கள்.



ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தங்களை, "மாணவர்களின் கால கண்ணாடி" என்ற கோணத்திலே தான் பணியாற்றி வருகின்றனர். மேலும் ஒரு தேசத்தின் வளமான எதிர்காலத்தை தாங்க இருக்கும் தூண்களுக்கு வைரம் பாய்ச்சுகின்றவர்கள் ஆசிரியர்களே. நமக்காக தம்மையே அர்ப்பணித்த ஆசிரியர்களுக்கு, எமது மனதளவு நன்றியையும் செயலளவு மரியாதையையும் உரித்தாக்குகின்றேன்.

மனித வரலாற்றில் இருந்து பிரிக்க முடியாத மனித சமூகத்தின் முதுகெலும்பாக விளங்குகின்ற ஆசிரியரை கவுரவப்படுத்தும் நோக்கில் பல்வேறு சமய கலாச்சார நிறுவனங்கள் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன. உலக ஆசிரியர் தினத்தில் 'யுனெஸ்கோ நிறுவனம்' ஆசிரியரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதமாக ஆசிரியரின் தன்மையினை கருத்தில் கொண்டு, பொது கல்விக்காக அல்லது சிறப்பு துறை ஒன்றிற்காக, அவர்களினால் ஆற்றப்பட்டு வரும் பங்களிப்பினை மரியாதை செய்யும் முகமாக ஆசிரியர் தினத்தை அறிவித்து கொண்டாடி வருகின்றது. பொதுவாக ஆசிரியரை மதித்து, மரியாதை செய்யும் வழக்காற்றினை ஆசிய நாடுகள் கொண்டுள்ளன. அவரவர் கலாச்சார பின்னணிகளுக்கு ஏற்ப , இதனை வெளிப்படுத்தும் விதத்தில் பல்வேறு மாற்றங்கள் உள்ளன. சீனர்கள் ஆசிரியரின் வினாவுக்கு விடை அளிப்பதாயினும், ஏதாவது ஒரு வினாவை கேட்பதாயினும் இரு கைகளையும் உயர்த்தி எழுந்து நின்று, கூறல், கேட்டலை மேற்கொள்வர். மேற்கு நாடுகளின் மாணவர்கள் ஆசிரியர்களை கௌரவித்து, மரியாதை செய்து, நினைவு கூறுவதற்கு வருடத்தில் ஒரு கணம் இந்த ஆசிரியர் தினம் மிகவும் அவசியமான ஒன்றாகும்.


சி. பாலவிகாஷ் -VIIIStd

# ஆசிரியராக வாழ்வை தொடங்கி உயர்ந்த மனிதர்கள்

இந்திய சமுதாய மறு மலர்ச்சியாளர் என்று போற்றப்படும் சாவித்திரிபாய் 1831 ஆம் ஆண்டு ஜனவரி மூன்றாம் நாள் மராட்டிய மாநிலத்தில் உள்ள சதாரா மாவட்டத்தில் நைஹான் என்னும் சிற்றூரில் விவசாய குடும்பத்தில் பிறந்தார். ஜோதிராவ்புலே 1846ஆம் ஆண்டில் ஒரு பள்ளியை தொடங்கி, சாவித்திரிபாயுடன் பாத்திமா ஷேக் என்ற பெண்ணையும் சேர்த்து சூத்திரர், ஆதிசூத்திரர் ஆகிய பெண்களுக்கு கல்வி புகட்டினார். பின்னர் 1848 ஆம் ஆண்டு சாவித்திரிபாய் ஆசிரியர் பயிற்சி பெற்றார். மீண்டும் 1848 ஆம் ஆண்டு புனேவில் 9 மாணவிகளுடன் ஒரு பள்ளியை துவங்கி, அதில் சாவித்திரிபாய் தலைமை ஆசிரியராக பணிசெய்தார்.

சுமார் ஆறு மாதங்களுக்குப்பின், அப்பள்ளி மூடப்பட்டு வேறொரு இடத்தில் தொடங்கப்பட்டது. பழமை வாதிகளும் மேல் ஜாதியினரும் சாவித்திரிபாய் கல்விப்பணி செய்வதை கடுமையாக எதிர்த்தனர்.அவர் மீது சேற்றினையும் மலத்தினையும் வீசி பல தொல்லைகள் அளித்தனர். தினமும் பள்ளி செல்லும் போது பழைய ஆடைகளை அணிந்து,பள்ளி சென்ற பின் வேறொரு ஆடையை அணிந்து கொள்வார். பல துன்பங்களுக்கு இடையில் கல்வி பணியாற்றினார். விதவைப் பெண்களின் தலையை மொட்டை அடிப்பதைக் கண்டித்து நாவிதர்களை திரட்டி 1863 ஆம் ஆண்டு மிகப் பெரிய போராட்டத்தினை சாவித்திரிபாய் நடத்தினார்.

1870 ஆம் ஆண்டு ஏற்பட்ட பஞ்சத்தினால் அனாதைகளான 52 குழந்தைகளுக்கு உறைவிட பள்ளியைத் தொடங்கி நடத்தி வந்தார். மார்ச் 10-1998 அன்று, இந்திய அஞ்சல்துறை, இவர் நினைவாக ஓர் அஞ்சல்தலை வெளியிட்டது. 1897இல் ஏற்பட்ட பிளேக் தொற்று நோயால் பாதிக்கப்பட்டோருக்கு, சிகிச்சை அளிப்பதற்காக சாவித்திரிபாய்புலேயும் அவரது வளர்ப்பு மகனும் மருத்துவருமான யஸ்வந்தும் ஒரு மருத்துவமனையை அமைத்தனர். புனேக்கு அருகில் உள்ள சாசனேமலா என்ற ஊருக்கு வெளியே தொற்று நோய் பாதிப்புக்கு உட்படாத இடத்தில் அந்த மருத்துவமனை இருந்தது. சாவித்திரிபாய் நோயால் பாதிக்கப்பட்டவர்களை, அந்த மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, சிகிச்சை பெறச் செய்தார்.



இப்பணியில் அவருக்கும் நோய்தொற்று ஏற்பட்டு மார்ச் மாதம் பத்தாம் நாள் 1897இல் விண்ணுலகை அடைந்தார். இந்தியாவின் முதல்பெண் ஆசிரியர் என்ற பெருமைக்குரிய இவர் ஆங்கிலேயர் காலத்தில் இருந்தே பெண் உரிமைக்காகவும் கல்விக்காகவும் பாடுபட்டார், பெண்கல்விக்காக முதல் பள்ளியை பூனாவிற்கு அருகில் உள்ள பிடேவாடாவில் 1848ஆம் ஆண்டு நிறுவினார். சாதாரண பெண்ணாக வாழ்வை தொடங்கி, ஆசிரியராக உயர்ந்து, சமூக சீர்திருத்த வாதியாக மாறிய சாவித்திரிபாய் புலேக்கு ஈடாக, இவ்வுலகில் எதையும் வழங்க முடியாது என்பதில் நாம் அனைவரும் பெருமிதம் கொள்வோம்.

**அ.கதீஜா XII Std**

---

## ஆசிரியர் தின கவிதைகள்:

கல்லை கனியாக்கி
கனியை அமுதமாக்கி
அமுதத்தை அறிவுச்சுடராக்கி
சுடரால் இருளையகற்றி
கசடற கற்க வைத்து
கல்லும் கரையும் வண்ணம்
எளிமையாக இனிமையாக
புரிந்து கொள்ளும் வண்ணம்
புரியாத புதிருக்கும் விடையளிக்கும் வல்லமையை
தந்த என் ஆசானே!
உனக்கு பல கோடி நன்றிகள்
உள்ளன்போடு செலுத்துகின்றேன்
ஏற்றுக் கொள்வீராக!



கல்லை சிலை ஆக்குவான் கலைஞன்
மண்ணை பானை ஆக்குவான் குயவன்
கற்பனையை ஓவியம் ஆக்குவான் ஓவியன்
மாணவனை வெற்றியாளனாக மாற்றுவான் ஆசான்
உன்னால் உருவாக்கிய மாணவர்கள்
எத்தனை எத்தனையோ?
மாணவர்கள் கல்வி கற்க
நீ கால் கடுக்க நின்றாய்
ஏட்டு கல்வியோடு பொது அறிவையும் கற்பித்தாய்!
மாணவர்களின் திறமையை ஊக்குவித்தாய்!
வழிகாட்டியாகவும் இருந்தாய்!
எத்தனை சாதனையாளர்களை உருவாக்கியுள்ளாய்!
உன் உழைப்பிற்கு ஈடு இவ்வுலகில் எதுவுமில்லை....

**அ. ஆஃபியா-VI-STD**

# தற்கால ஆசிரியரின் கற்பித்தல் முறை



உலகம் மிக வேகமாக மாறி வருகின்றது. அதனால், நம் பழைய அறிவு புதிய காலத்திற்கு பயனற்றதாக போய்விடுகின்றது. பல்வேறு நாடுகள் பழைய கல்வி முறைகளை மாற்றி,புதுக்கல்வி கொள்கைகளை வகுத்துக் கொள்கின்றன. பின்லாந்து போன்ற நாடுகளில் வழக்கமான பாடத்திட்டங்களில் இருந்து விலகி நடைமுறையில் காணும் நிகழ்வுகளை வைத்து குழந்தைகளுக்கான அறிவு புகட்டப்படுகின்றது. நம் அன்றாட வாழ்வுக்கு என்ன தேவையோ அதை கற்பிக்கிறார்கள். அரசுக்கு மனு எழுதுவது எப்படி? கடைகளுக்குச் சென்று பொருட்கள் வாங்குவது எப்படி? பருவநிலை மாற்றம் என்றால் என்ன? அது எப்படி நம் அடிப்படையிலிருந்து தொடங்குகிறது? இவை அனைத்தையும் நடைமுறை பயிற்சியில் தொடக்கப்பள்ளியிலேயே கற்பிக்கிறார்கள். குறிப்பாக வாழ்க்கை குறித்து அவநம்பிக்கையை விதைக்காமல், வாழ்தல் குறித்த நம்பிக்கையையும், சக மனிதர்கள் மீது பாசத்தையும் ஏற்படுத்துவதாக கல்வி உள்ளது.

மாணவர்கள் ஆசிரியர்கள் கூறுவதை மௌனமாக கேட்டு கற்றலில் ஈடுபடுவர் . ஆசிரியர்கள் மைய கற்பித்தல் அணுகுமுறையில் ஆசிரியர்கள் அதிகார மையங்களாக விளங்குகிறார்கள். தேர்வு மற்றும் மதிப்பீட்டின் மூலம் மாணவர்களின் கற்றல் அடைவுகள் சோதிக்கப்படுகிறது. மாணவர் மைய முறையில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், கற்றல் செயல்பாட்டில் சமமாக செயல்படுகின்றனர்.

மாணவர்கள் பாடப்பொருளை முழுவதுமாக புரிந்து கொள்ள வைப்பதும் மற்றும் பாடப்பொருளை எளிதாக்குவதும் ஆசிரியரின் முதன்மை செயல்பாடாக இருக்கிறது. நேரடியாக அல்லது மறைமுகமாக மாணவர்களின் கற்றல் அளவிடப்படும். ஆசிரியர் இங்கே ஒரு பயிற்றுநராகவும் நடத்துபவர் ஆகவும் செயல்படுகிறார். மாணவர்கள் கற்றல் குழு செயல்பாட்டின் மூலமும், வகுப்பறை செயல்பாட்டின் மூலமும், அளவிடப்படுகின்றனர். எந்தமுறையை கையாண்டாலும் ஆசிரியர்களின் நோக்கம் சிறந்த மாணவர்களை உருவாக்குவதே ஆகும்.

**அ.முஹம்மத் ஜைத் X-Std**

# தேசிய நல்லாசிரியர் விருது ஏன் வழங்கப்படுகிறது?




இந்தியாவில் ஆசிரியர் பணியில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் ஆசிரியர்களுக்கான தேசிய விருது வழங்கப்படுகிறது. ஆசிரியராக இருந்து தலைவராக உயர்ந்த சர்வ பள்ளி ராதாகிருஷ்ணனை போற்றும் விதமாக ஆண்டு தோறும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு நல்லாசிரியர் விருது வழங்கப்படுகிறது. கல்வித் துறையில் சிறப்பாக பணியாற்றிய ஆசிரியர்களுக்கு, நல்லாசிரியர் விருதுகளை மத்திய,மாநில அரசுகள் வழங்குகின்றன. இவ்விருது பெற ஆசிரியர்கள் 15 ஆண்டுகளும் தலைமையாசிரியர்கள் 20 ஆண்டுகளும் பணியாற்றி இருக்க வேண்டும். மேலும் சமுதாயத்தில் கண்ணியமானவராகவும் புகழ் மிக்கவராகவும் இருத்தல் வேண்டும். மாணவர்களிடத்தில் அன்பு மிக்கவராகவும் சமுதாய நலனில் அக்கறை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

தற்போதைய நிலையில் இவ்விருதின் மொத்த எண்ணிக்கை 378 ஆகும். இவ்விருதினை பெறும் ஆசிரியர்களுக்கு ரூபாய் 50,000 காசோலையும் வெள்ளி பதக்கமும் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்விருதின் ஒரு பகுதியாக வகுப்பறையில் கற்றல் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி, கற்பித்தல் முறைகளை கையாளும் ஆசிரியர்களுக்கு 'ஐ .சி .டி தேசிய நல்லாசிரியர் விருதுகள்' மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் மாநில அரசு நல்லாசிரியர் பட்டியலை உருவாக்கி, நடுவண் அரசுக்கு அனுப்புகிறது. இறுதியாக விருதுக்குரியவர்களை நடுவண் கல்வி அமைச்சகம் தேர்வு செய்கிறது. இந்த முடிவுகள் அறிவிக்கப்பட்டு செப்டம்பர் 5ஆம் தேதி டெல்லியில் நடைபெறும் ஆசிரியர் தின விழாவில் , இந்த விருது வழங்கப்படுகிறது. தேசிய விருதுக்கு தேர்வு செய்யப்படும் ஆசிரியர்களுக்கு குடியரசு தலைவர் மாளிகையில் நடக்கும் விழாவில் குடியரசு தலைவர் விருதுகளை வழங்குவார். தமிழகத்தில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் 22 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். நடுவண் அரசின் நல்லாசிரியர் விருது பெறுவோருக்கு குடியரசு தலைவர் ,பிரதமர் ,மனித வள மேம்பாட்டு துறை அமைச்சர் ஆகியோர் விருந்து தந்து பெருமைப்படுத்துகின்றனர். அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் தொடர்வண்டியில் இலவசமாக பயணிக்கும் சலுகையும் வழங்கப்படுகிறது. 1997 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு நல்லாசிரியர் விருதை' டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது 'என்னும் பெயரில் வழங்கி வருகிறது.

**சபியா பாத்திமா XI Std**

## என்னை கவர்ந்த ஆசிரியர்




பாடம் கற்பித்து தருவது மட்டுமல்லாமல் ஒழுக்கத்தையும் நற்குணங்களையும் அன்பையும் பணிவையும் கற்றுக் கொடுத்து , ஒரு மனிதனை உயர்ந்தவனாக , சிறந்தவனாக, வெற்றியாளனாக மாற்றுவதற்கு தேவையான அனைத்தையும் கற்றுத்தருபவர் ஆசிரியர். மேலும் எங்களுக்குள் மறைந்திருக்கும் திறமைகளைக் கண்டறிந்து எங்களை ஊக்குவிப்பவர் தான் ஆசிரியர். அந்த வகையில் ஒவ்வொரு மாணவ மாணவிகளுக்கும் ஏதாவது ஒரு ஆசிரியரை மட்டும் பிடித்திருக்கும். அதேபோல் என்னைக் கவர்ந்த ஆசிரியராக , எமது பள்ளி தாளாளர் அவர்களை கருதுகிறேன். ஏனென்றால், என் பள்ளி தாளாளர் அவர்கள் அறிவுரை கூறும் போதெல்லாம் புத்தகத்தில் உள்ள பாடங்களை அப்படியே மனனம் செய்து, தேர்வில் முதல் மதிப்பெண் பெறுவது மட்டும் கல்வி அல்ல; மாறாக ஒழுக்கத்திலும் நற்குணத்திலும் பிறர் நலம் பேணுவதிலும் சிறந்தவனாக நாம் என்று திகழ்கின்றோமோ, அதுவே உண்மையான கல்வி என்று அறிவுரை கூறுவார்.

மேலும் என் பள்ளி தாளாளர் அவர்களின் பணிவான பேச்சுகளும், எங்கள் மீது அவர்கள் எடுக்கும் முயற்சிகளும், எங்களுக்காக அவர்கள் காட்டும் அக்கறைகளும், எனக்கு மிகவும் பிடித்தது. எனவே, அவர்களுடைய உயர்ந்த நோக்கங்கள் நிறைவேறுவதற்கும் அவர்கள் நினைக்கும் அளவிற்கு சிறந்த மாணவ, மாணவிகளாக திகழ்வதற்கும், முயற்சி மேற்கொள்வதே, நாங்கள் அவர்களுக்கு செய்யும் நன்றி ஆகும்.

**மு. சா. ருக்கையா-VIIStd**

## பண்டையகால ஆசிரியரின் கற்பித்தல் முறை

கற்றலின் மூலம் அறிவு தெளிவடைதல், தன்னுடைய திறமைகளை வளர்த்துக்கொள்ளுதல், சுயமதிப்பு, மரியாதை, நம்பிக்கையை வளர்த்தல், சிறந்த பழக்க வழக்கங்களைக் கையாளுதல், தனது சமூகத்தை வழிநடத்துதல் போன்ற செயல்களே சிறந்த கல்வியாகும்.

**கல்வியின் வரலாறு:**

பண்டைய காலத்தில் மூத்த குடிமக்கள் தங்களது சமுதாயத்தை நல்ல முறையில் வழிநடத்தவும், பிற்காலத்தில் அவர்கள் அறிவிலும், திறமையிலும் மேன்மையடைய, தம் இளம்வயதினரை பயிற்றுவிப்பதற்காக கல்வி ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் வாய்மொழியாகவும், தங்களை பிரதிபலிப்பது மூலமாகவும் மற்றவரை சென்றடைந்தது. அதாவது கதை சொல்லுதல், திறமைகளை வெளிக்கொணர்தல், கற்பனைத் திறன் போன்றவை மூலமாக அடுத்த தலைமுறைக்கு கல்வி எடுத்துச்செல்லப்பட்டது.

**பண்டைய கால கல்வி:**



பண்டைய காலத்தில் கல்வி என்பது தமிழகத்தில் மிகவும் முக்கியமானதாக கருதப்பட்டது. ஏனெனில் “கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு”. “கல்லாதான் மனதில் இருள் குடிகொள்ளும்”, என்ற பழமொழிகளுக்கேற்ப மனிதர்கள் வாழ்ந்து வந்தனர். அப்போது இளைஞர்களிடம் போதிய நேரமும் கற்றலின் அவசியமும் இருந்தது. அதனால் குருகுலம் சென்று குருவிற்கு சேவை செய்து, தனது இலக்கை அடைந்தனர். அக்காலத்தில் தமிழ்ச் சங்கங்கள் மற்றும் நூலகங்கள் போன்றவற்றின் மூலமும் கல்வியை வளர்த்தனர்.

**தமிழ்ச்சங்கம் மற்றும் பெண்கல்வி:**

தமிழ்ச்சங்கம் என்ற பெயரில் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு சங்கங்கள் நிலவி வந்துள்ளன. சங்கம் என்பது புலவர்கள், சான்றோர்கள், மற்றும் கவிஞர்கள் ஒருங்கிணைந்த கூட்டமைப்பாகும். பண்டைய காலத்தில் மூன்று சங்கங்கள் இருந்துள்ளதாக இறையனார் களவியல் உரையில் கூறப்படுகிறது. அவர்கள் தமிழ் இலக்கியங்களையும், மக்களுக்காக இலக்கணங்களையும், மன்னருக்கான அறிவுரையையும் தங்களது எழுத்தோலையின் மூலம் வரைத்துள்ளனர். கடைதமிழ்ச்சங்கம் இருந்த இடம் தற்போதுள்ள மதுரையாகும்.

பெண்கல்விக்கு சிறந்த எடுத்துக்காட்டாக தமிழ்ச்சங்கம் விளங்கியது. அக்காலத்தில் பெண்கள் இயல், இசை, நாடகம் போன்றவற்றில் சிறந்து பயிற்சி பெற்றிருந்தனர். சங்க இலக்கியத்தில் பெண்கள் பலவிதமான இசைக்கலைகளில் தங்களை வேறுபடுத்திக் காட்டியுள்ளனர் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. அக்காலத்தில் பெண்கல்வியும், அவர்களின் சுதந்திரமும் ஒரு நாட்டின் சிறந்த ஆளுமையை வெளிப்படுத்தியது; நாகரீக வளர்ச்சி இல்லாத காலத்தில் மக்கள் தங்களது கருத்துகளை வெளிக்கொணர இயல், இசை, நாடகம் போன்றவற்றின் மூலம் எளிதாக தங்கள் சமூகத்திற்கு கல்வியை கற்பித்தனர். மேலும், அதனை அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச்சென்றுள்ளனர்.

**மு. ஆயிஷா IX-C Std**